முரசுமோட்டை - கண்டாவளை
மக்கள் ஒன்றியம், கனடா
பெருமையுடன் வழங்கும்







# வயல் காற்று

MARCH 30TH 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FRIENDLY
## TRUCK DRIVING SCHOOL

"Driving Towards Success"




**Courses Available**

- Class A, B, C & D
- Air Brake ("Z"Endorsement)
- Defensive Driving Course (DDC/PDIC)
- Transportation of Dangerous Goods (TDG)
- Border Crossing
- Hours of Service (Log Books)
- Map Reading &Trip Planning
- Classes are given seven days a week
- Lessons are given by highly qualified and experienced instructors
- Flexible Schedule (5am – 10pm)

*850 Tapscott Road, Unit #9,*
*Scarborough, ON M1X 1N4*

**Tel: 416-291-9075**

*www.friendlydrive.com*

Member Of

TTSAO

Ontario Safety League

Ontario Trucking Association

CFIB
CANADIAN FEDERATION OF INDEPENDENT BUSINESS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசுமோட்டை– கண்டாவளை
# மக்கள் ஒன்றியம்

பெருமையுடன் வழங்கும்

# வயல் காற்று 2013

அனைவரையும் அன்புடன் வருக வருக என வரவேற்கின்றோம்

**கனடா கந்தசுவாமி கோயில் மண்டபம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தாய் வணக்கம்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே
ஏழ் கடல் வைப்பினந் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே

- புரட்சிக் கவி பாரதி

## Canadian National Anthem

O Canada!
Our home and native land!
True patriot love in all thy sons command.

With glowing hearts we see thee rise
The True North strong and free!

From far and wide,
O Canada, we stand on guard for thee.

God keep our land glorious and free!
O Canada, we stand on guard for thee.

O Canada, we stand on guard for thee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முரசுமோட்டை கண்டாவளை ஒன்றிய
## நிர்வாக சபை - 2008

| | |
|---|---|
| President | Jeya Manikavasagar<br>416 754 0067 |
| Vice President | Ananthan Rasiah<br>647 773 8612 |
| Secretary | Muralitharan Sivasuntharm<br>647 893 2234 |
| Vice Secretary | Thavarangini Kadambamuthy<br>416 609 0355 |
| Account Rep | Naventhan Kandiah<br>416 628 6109 |
| Sports | Prem Muthusamy<br>647 284 9422 |

## Committee Members

| | |
|---|---|
| Kanapathipillai Nagalingam | 905 591 1917 |
| Kannan Kandiah | 416 648 0257 |
| Paramanathan Nagalingam | 905 554 3503 |
| Ratha Ramachandran | 905 683 5602 |
| Ravi Karuppaiah | 647 910 0539 |
| Thana Manikkavasagar | 416 298 6772 |
| Vijayakumar Velauthampillai | 416 744 4216 |
| Vinayagasenthiram Murugar | 416 846 8473 |
| Yosokumar Murugar | 416 414 1024 |
| Moganathas Balasubramaniam | 905 591 1141 |
| Theurmaran Kunaratnam | 416 335 3711 |
| Kasinathar Karuna | 416 439 7197 |
| Vikraman Nadarajah | 647 996 6109 |
| Manokumar Kanakasingam | 647 704 5757 |
| Sriparan Kunaratnam | 416 918 6413 |
| Kunabalachandran Manikkavasagar | 647 708 4364 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

**மங்கள் விளக்கேற்றல்**

திரு.கந்தர் பொன்னம்பலம்.

திருமதி.கந்தையா-பராசத்தி

திரு. பூலோகசிங்கம் கந்தையா

திருமதி. சற்குணவதி கந்தையா

திரு. கனகலிங்கம் பாலசுப்பிரமணியம்

**தொகுப்பாளர் அறிமுகம்**

திரு. பிறேம் முத்துகுமார்

செல்வி.யதுசா காசிநாதர்

செல்வி.யசோக்குமார் நிருஷிகா

**அகவணக்கம்**

**தமிழ் தாய் வாழ்த்து**

**கனடா தேசிய கீதம்**

யதுசா காசிநாதர்

கோபினா விஜயகுமார்

**விடுதலை கீதம்/பக்தி பாடல்**

நகுலேஸ்வரன் மகாலிங்கம்

**வரவேற்புரை-தலைவர் உரை**

திரு ஜெயபாலசந்திரன்-மாணிக்கவாசகர்

**சிவசவுத்திரம் - பரத நாட்டியம்**

ரூபிணி தெய்வேந்திரன் மாணவி

மகிசா திருமாறன்

**பாட்டு**

தரணியா தசிதரன்

**திரை இசை நடனம்**

ரமிலன் இராமச்சந்திரன்

**Keyboard**

சாருகா ரவிந்திரன்

**பாட்டு**

லாவண்யா கருணானந்தன்

விக்னன் கருணாகரன்

அஜித் ரவிகுமார்

அஸ்வினா தியாகலிங்கம்

அதினா சிவகுமார்

**திரைஇசை நடனம்**

மதுமிதா மோகனதாஸ்

நர்மிலா மோகனதாஸ்

நிருஷிகா யசோக்குமார் மாணவிகள்

கனுசி ராஜன்

பிரித்திகா குலராஜன்

தனுஜா தயாளன்

அன்றியா சாந்தகுமார்

**நடனம்**

வாசு ஆசிரியர் மாணவிகள்

பிரியங்கா பரமநாதன்

கீர்த்தனா சிவகுமார்

சகானா சிவகுமார்

**திரை இசை நடனம்**

விதுஷன் ரவிசந்திரன்

அரவின் ரவிசந்திரன்

**விருந்தினர் வாழ்த்து**

திரு பொன்னையா விவேகானந்தன்

**கவிதை**

யதுசா காசிநாதர்

**நடனம்**

நிரஞ்சனா சந்துரு ஆசிரியரின் மாணவி

நிருஷிகா யசோக்குமார்

**திரை இசை நடனம்**

கீர்த்தனா கடம்பமூர்த்தி

**திரை இசை நாடகம்**

யதுசன் காசிநாதர்

**திரை இசை நாடகம்**

அஜே கிருபா

அஸ்ரன் கிருபா

**நடனம்**

பிரியங்கா பரமநாதன்

கீர்த்தனா சிவகுமார்

சகானா சிவக்குமார்

**பாட்டு**

நகுலேஸ்வரன் மகாலிங்கம்

**நகைச்சுவை நாடகம்**

**திரை இசை நாடகம்**

கணபதி ரவிந்திரன் குழவினர்

**சிறப்புரை**


தனாமணிக்கவாசகரின்

**அதிஸ்டம் பார்வையிடும் நேரம்**

**நன்றி உரை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அனைத்து விதமான கொண்டாட்டங்களுக்கும்
வீடு அல்லது மண்டபங்கள் அலங்கரிக்கும்
ஒரே இடம்




# அம்பாள் அலங்கார சேவை

**குமார்: 416 725 6395**

**அல்லது**

**செல்வகுமார்: 416 418 5239**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தலைவர் உரை**



முரசு மோட்டை - கண்டாவளை மக்களுடன் சேர்ந்து இரண்டாவது முறையாக இந்த உன்னரங்க ஒன்று கூடல் நிகழ்ச்சியை நடத்துவதில் நான் மிகவும் சந்தோஷப்படுகின்றேன். மீண்டும் ஒருமுறை எனக்கு தலைவர் பதவியை வகித்து இந் நிகழ்ச்சியில் பங்கெடுக்க உதவிய முரசு மோட்டை கண்டாவளை மக்களுக்கு மீண்டும் ஒரு முறை றநன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.


முரசு மோட்டையை பொறுத்த வரையில் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தும் வந்து குடியேறிய எமது பெற்றோர்களின் தலைமுறைகள் எமக்கு பெற்றோர்களின் வழியாகவும் திருமண பந்தங்களின் வழியாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட பல இடங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் உதவி செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். இருந்தாலும் இப்படியான இக்கட்டான சந்தர்ப்பங்களிலும் எமது மக்களும் வர்த்தகர்களும் முரசுமோட்டைக்கு முன்னுரிமை கொடுத்து உதவிகளை தாராளமாக வளங்கி வருவது மிகவும் பாராட்டக் கூடிய விஷயமாக உள்ளது.

ஆத்துடன் இந்த சிறிய வறிய விவசாயக் கிராமத்துக்கு நான்கு பள்ளிக்கூடங்கள் அதாவது முரசுமோட்டையின் மத்தியில் இருபாடசாலைகளும் கிழக்கு - மேற்கு எல்லைகளில் இரண்டு பாடசாலைகளும் அமைந்துள்ளன. இந்த நான்கு பாடசாலைகளுக்குமான சில சிறிOய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கும் எண்ணத்தில்தான் இந்நிகழ்ச்சியை முரசுமோட்டைம க்கள் நடத்துகின்றார்கள். வளர்ந்து வருகின்ற வர்த்தகப் பெருமக்களின் ஆதர"வும் - கிராமத்து மக்களின் விடா முயற்சியும் இந்நிகழ்ச்சிக்கு மிகவும் ஆதரவாக அமைந்துள்ளது. அத்துடன் இம்முறை மிகமுக்கியமான விடயம் இளைய தலைமுறையின் பங்கு சகல விடயங்களிலும் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெறுவது வரவேற்கத்தக்கதாக உள்ளது. இம்மாதிரியான முன்னேற்றம் எமது ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு மிகுந்த உத்தர வாதமான எதிர்காலத்தை மனக்கண்ணுள் வடிவமைத்துள்ளது. இவ்விழா இனிதே நடைபெற எனது அன்பான பண்பான வாழ்த்துக்கள்.

தலைவர்
மாணிக்கவாசகர்
ஜெயபாலச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்



சிவசத்தியாய் சோகமதிலே சேர்ந்துருவெடுத்து நடமாடிடும்
அவதாரத்தின் அந்தரகம் அவனிக்கொரு அரிநித்யாகும்
உங்சகளில் அன்பை விருத்திசெய்து மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
இதுவே உண்மையான தியாகம்.
கடவுளுக்கு ஒரு உருவம் உண்டு. அவர் எங்கும் வியாபித்து இருக்கிறார்.
எங்கே நம்பிக்கை யுண்டோ அங்கே சத்தியத்தை உணர்வீர்கள்
எங்கே நம்பிக்கையுண்டோ அங்கே அன்பு உண்டு.
எங்கே அமைதி உண்டோ அங்கே சத்தியம் உண்டு.
எங்கே சத்தியம் உண்டோ அங்கே ஆனந்தம் உண்டு.
எங்கே ஆனந்தம் உண்டோ அங்கே கடவுள் உண்டு.
நீங்கள் உங்கள் தாயை நேசிக்கிறீர்கள் ஏன் எனில்
அவர்கள் உங்கள்தாய் என்ற நம்பிக்கை.
அதேபோல் கணவன் மமைவியை நேசிக்கிறார்.
ஏன் எனில் அவள்தான் தன்னுடைய மமைவி என்ற நம்பிக்கை.
நம்பிக்கைதான் அன்புக்கு ஆதாரம். தழராத
நம்பிக்கையே ஆன்மீகத்தை அடையும் வழி
ஆன்மீகத்தில் ஈடு பட்டு நல்ல பேரை பெறுங்கள்.
உங்கள் உடைய உடம்பு கடவுளால் உருவாக்கப்பட்டது.
ஆகையால் அதை உயர்ந்த செயலுக்குப் பாவியுங்கள்.
தீயதைப் பார்க்காதீர்கள் நல்லவையை பாருங்கள்.
தீயதை கேளாதீர்கள் நல்லதையே கேளுங்கள்.
தீயதை கதைக்காதீர்கள் நன்மையையே கதையுங்கள்.
தீயதை எண்ணாதீர்கள் நல்லதையே எண்ணுங்கள்.
தீயதை செங்ஙாதீர்கள் நன்மையே செய்யுங்கள்.
இதுவே கடவுளை அடையும் வழி
இருதையம் நல்லதாய் இருக்கவேண்டும் முக்கியம்
என்னேரமும் இருதயத்தில் இருக்கவேண்டும். நீங்கள்
விரும்பிய கடவுளை வைத்திருக்கவேண்டும். அப்போதுதான்
அருள்மழை பொழிவார். எனக்கு பொழிந்துள்ளார்.
பொளிவார் என்னும் சிவதொண்டன்

க. பொன்னம்பலம் (நடராசா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nature Photo

Toronto, Canada

## உங்கள் நினைவுகள் எங்கள் நிஜங்கள்

திருமணம்

பூப்புனித நீராட்டுவிழா

பிறந்ததினம்

அரங்கேற்றம்

ஒன்றுகூடல்

போன்ற அனைத்து நிகழ்வுகளையும்
டிஜிற்றல் வண்ணத்தில் படம்பிடிக்க அழையுங்கள்





**அழையுங்கள்**


**விக்ரம்: 647 996 6109 வேந்தன்: 647 628 6109**

naturephoto4u@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

இந்த நிகழ்வுக்கு என்னை விருந்தினராக அழைத்தமையையிட்டு மிக்க மகிழ்ச்சி.

தாயகத்தின் வேர்களை மறந்துவிடாமல். அந்த உணர்வை அடுத்த தலைமுறைகளுக்கும் எடுத்துச் செல்கின்ற பணியில் இது போன்ற விழாக்கள் முதன்மை பெறுகின்றன. எமது தாயகக் கிராமங்களில் எம் பெற்றோர் வாழ்ந்த வாழ்வும், எமது வாழ்வும் மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டதல்ல. விவசாயத்தைப் பின்புலமாகக் கொண்ட வாழ்க்கை எம்முடையது. வாய்க்கால் நீரையும் வானத்தையும் நம்பிய வாழ்வு. ஒருபொழுதில் வாழவைக்கும். இன்னுமொரு பொழுதில் வாட்டி வதைக்கும்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற விடுதலைப்போராட்டத்திலும் எம் கிராம மக்கள் பல துன்பங்களைச் சுமந்தனர். அவர்களில் எம்மைப்போன்றோர் கனடா போன்ற நாடுகளுக்குப் பெயர்ந்தோம்.

இங்கு வேறுவகையான வாழ்க்கைப் போராட்டம். முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய பண்பாட்டுத்தளத்தில் குடியேறி. நாளும் பொழுதும் போராடி இந்த வாழ்க்கையை இங்கு கட்டியெழுப்பியிருக்கின்றோம். தாயகத்தில் நாம் கற்றுக்கொண்ட போராட்ட குணமே எம்மை இங்கு நிலைநிறுத்த உதவியது. இந்த மண்ணிலே எமது இருப்பு நிரந்தரமாகிவிட்டது. எமது அடுத்த தலைமுறையினருக்கு இந்த நாடே முழுமையான வாழ்புலமாகிவிடும். இதுதான் இயல்பானது. இந்த நிலையில் நாம் ஒரு சவாலை எதிர்கொள்கின்றோம். தாயகத்தில் எமது உறவுகளோடு நாம் கொண்டிருக்கும் தொடர்புகள் அடுத்த தலைமுறைகளிலும் தொடருமா? இதுதான் அந்த சவால். தொடர்புகள் அறுந்துபோகுமாயின் விடிவை நோக்கியிருக்கும் அந்த மக்களின் வலிமை குறைந்துவிடும். அவர்கள் வாழ்வு மேலும் துன்பமுறும்.

கனடா போன்ற வாழ்புலங்களில், எம் தலையான கடமை தாயக உறவுகளைப் பேணுவதே. புதிய தலைமுறைகளுக்கும் அந்த உறவுகளின் பயனை ஊட்டி வளர்க்க வேண்டும். இது போன்ற ஒன்றுகூடல்கள் தாயக உறவுகளைப் பேண பெரிதும் துணை செய்யும்.

முரசுமோட்டை, கண்டாவளை மக்கள் ஒன்றுகூடி இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளீர்கள். கூடுவது மட்டுமன்றி ஊரின் உறவுகளுக்கும் உதவுகின்றீர்கள். இந்தப்பணி காலாகாலத்திற்கும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

என்னை இந்த விழாவுக்கு விருந்தினராக அழைத்தமைக்கு என் உளமார்ந்த நன்றி!

**பொன்னையா விவேகானந்தன்.**
பன்மொழிக்கல்வித்திட்ட அலுவலர்
ரொரான்ரோ கல்விச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முரசுமோட்டை- கண்டாவளை மக்கள் ஒன்றியம் - கனடா வயற் காற்று.**

யாதும் ஊரே! யாவரும் கேளீர்! தீதும் நன்றும் பிறர் தர வரா் என்பது சங்கத் தமிழன் கனியன் பூங்குன்றனாரின் உலகாயுதத் தத்துவம் இது.

ஒரு தேசம், வரலாற்றில் நுழைவது தேச விடுதலைப் போராட்டத்தின் விளைவால்தான் என்பது. வரலாறு கற்றுத்தந்த பாடம். தமிழ்த் தேசிய இனம் தனது சுயநிர்ணய உரிமைக்கான இலட்சியப் பயணத்திலே மிகப் பெரிய நெருக்கடியைச் சந்தித்திருக்கின்ற தருணம் இது. ஒருகாலத்துயரினுள் துயருற்றிருக்கும் வேளையில்

“பாதை இல்லை என்று கலங்காதே! பாதையை நீயே உருவாக்கு” என்பது லெனின் அவர்களின் மந்திர வாக்கு.

உண்மையான வரலாற்றை மீளவும் உருவாக்கத்துடிக்கும் தமிழினம் உலகமெலாம் பரந்து. செறிந்து வாழ்ந்தாலும் தமிழர்கள் தமது பண்பாட்டு இன அடையாள வாழ்வியலைப் பற்றிக் கொண்டுதான் வாழ்கிறார்கள் புலம் பெயர் வாழ்வில். பொருளாதார ஆதாரங்களுக்காக இயற்கையோடு போராடிக் கொண்டும் தாயக உறவுகளின் துயரக் கதைகளை நெஞ்சிலே சுமந்து விடுதலைக்கு குரல் கொடுக்கும் யாகத்திலும் பங்கு கொள்வது கண்டு நாம் பெருமிதம் கொள்கிறோம். வேரும் வேரடி மண்ணோடு தமிழினம் பிடுங்கி எறியப்பட்டபோதும்

ஒரு மக்கள் கூட்டம் தனது வரலாறு பற்றி மீண்டும் உணர்வுடையவர்களாய் மாறுதல் என்பது அவர்களின் மறு பிறப்புக்குச் சமனானது. (து.மு.ஞுநசழிழ 1957)

உலகமும் மக்கள் வாழ்வியலும் வேகமாக மாறி வருகிறது. மாற்றம் ஒன்றைத்தவிர மற்றெல்லாம் மாறிவிடும் என்பதை ஏற்றுக்கொண்டு அறிவுசார் யுகத்திற்குள் இசைந்து வாழ நாம் நம்மை மீள ஒழுங்கமைத்து, தகவமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமும் அவசரமுமான தேவைப்பாடாகும். அறிவார்ந்த அணுகுமுறைகளும் புலமைசார் கருத்துருவாக்கங்களும் எமது அறிவுப் பொருளாதாரத்தின் கால்கோளாய் அமைதல் வேண்டும்.

அந்தவகையில் புலம் பெயர் வாழ்வில் எமது மக்கள் அன்போடும், உறவோடும் கூடிக் தரம் சேர்க்கும் நிகழ்வுகள் எமது தாயக உறவுகள் வாழ வலுச் சேர்க்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஈழத்தில் ஏறி உயர்த்த மலை இல்லையாயினும் இருந்தன தோள்கள்.

கண்டாவளை, முரசுமோட்டைக் கிராமங்கள் வன்னியின் பாரம்பரிய கிராமங்களாகும். எமது பச்சை வயற் பரப்பில் உழவுக்கும் தொழிலுக்கும் ஏற்றம் தந்த மருத நிலத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்டைக் குழந்தைகள் இவை. இன்றும் இன்னும் பச்சை வயல் காற்றில் சிலிர்த்துக் கொண்டிருக்கிறது மக்கள் மனங்கள்.

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும் இந்நாடே- எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் பேசி
அறிந்ததும் இந்நாடே- அவர்
கன்னியராகி நிலவினிலாடிக்
களித்ததும் இந்நாடே
என்ற பாரதியாரின் வரிகள் இங்கு நிதர்சனமாய் காட்சியளிக்கிறது.

உங்கள் வயற் காற்று இன்று போல என்றும் வீசட்டும் நாமும் இங்கே! பச்சை வயற் பரப்பிற் பால் நிலவு இறங்கி வந்து இன்பம் ஊட்டும் இனிய பொழுதொன்றில் தென்றலோடு கதை பேசி மகிழும் காலம் வரும் வரை காத்திருக்கிறோம். எம் இனிய உறவுகளே! காத்திருக்கிறோம். அதுவரை கண்விழித்திருப்போம் நண்பர்களே!

வெற்றிடங்களை இயற்கை ஒருபோதும் விடுவதில்லை.
சி.சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு,
கிளிநொச்சி.


**கோடைகால ஒன்று கூடலும்**
**விளையாட்டுப் போட்டியும் - 2013**

**இடம்: நெல்சன் பார்க்** (Nelson / Finch)
**திகதி : 14- ஜூலை - 2013 காலை 8மணிமுதல்**

சுடச்சுட அப்பம், பால் அப்பம், முட்டை அப்பம்
காலை 8:00 - 10:30 வரை

மற்றும் சுவைமிக்க உணவ வகைகள்
விளையாட்டுப் போட்டிகள்

தொடர்புகளுக்கு: யசோக்குமார்
416 414 1024
murasumoddai@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளி/முருகானந்தா கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

கனடா வாழ் ஒன்றியத்தினரால் வெளியிடப்படுகின்ற வயற்காற்று என்னும் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் அகம் மகிழ்கின்றேன்.

பல்வேறு கனதியான ஆக்கங்களைத் தாங்கி, தமிழ் மாந்தர்கள் ஒவ்வொருவரதும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்ற வயற்காற்றானது வானளாவ உயர்ந்து என்றும் புகழ் மணம் பரப்ப வேண்டும் என்பதை விரும்புகிறேன். மக்களின் அவலங்களைத் துடைத்தெறிந்து ஆறதலை அவாவி நிற்கும் உள்ளங்களுக்கு அன்புக்கரம் நீட்டி ஆதரவு வழங்கவதாக வயல்காற்று அமைகிறது. இவ்வாறாக எழுகின்ற பல நூல்கள் வாசகர்களது மனக்கதவுகளைத் திறக்கின்ற திறவுகோலாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இவர்களது கால ஆற்றல்களை வளர்க்கவும் இக் கலைப்படைப்பு கைகொடுத்து உதவுகிறது. எந்த விடயமாயினும் காலத்திற்கு ஏற்ற மாற்றங்களும் முன்னேற்றங்களும் தவிர்க்க முடியாதவை. அத்துடன் இன்றியமையாதவை. மனிதனின் சிந்தனை விருத்திக்கும் அகப்புல விரிகைக்கும் மொழி இன்றியமையாதது. மனிதனின் ஆளமை விருத்தியின் அடிப்படை அம்சமாக விளங்கும் வயற்காற்று வளம் பெற்றுச் சிறப்புற வேண்டும். இவ் வயற்காற்று இத்தோடு நின்றுவிடாது மீண்டும் மீண்டும் உதயமாகி மணம்வீச வாழ்த்துகிறேன்.

அதிபர்
**திரு. தி. வரதன்**
கிளி/முருகானந்தா கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆண்ட தமிழன் அடிமையாமோ?

இங்குள தமிழர்க் கின்னல் நிகழ்ந்தால்
பொங்கி எழுவர் போர்க்கொடி பறக்கும்
சிங்கள அரசு திகைக்கும் படியாய்
எங்கும் தமிழினம் எதிர்த்தே கிளம்பும்
மக்கள் குரலை மதியா அரசன்
தக்கா னல்லான் தரணியை இழப்பான்
ஓரின அரசை உதறித் தள்ளிச்
சாரின அரசைத் தமிழன் சமைப்பான்
சங்கம் கண்ட தமிழன் மாண்பு
எங்கும் பரவி இருந்த தன்று
இமயம் முதலாய் ஈழம் வரையும்
சமயம் பரப்பித் தமிழன் ஆண்டான்
அன்னியன் விஜயன் அடிவைத்த வேளை
இந்நிலம் தன்னில் இருந்தாள் குவேனி
அன்னாள் இலங்கைவாழ் ஆதித் திராவிடம்
என்னில் விஜயனுக் கேது அரசு
சரித்திரம் ஏற்போர் தமக்குப் பாதி
வரன்வழி வந்த வழியினை உணர்த்தின்
எஞ்சிய நிலத்தில் எமக்கே யுரிமை
வஞ்சனை கொள்வரேல் வளம்மிக இழப்பர்
பீதி யில்லைப் பிணக்கு நீங்கும்
இராவண மன்னன் இந்துத் திராவிடன்
திராவிடக் கலைகள் தெரிந்த அறிஞன்
இராவணன் ஆட்சி இருந்த காலம்
புராதன சிங்களர் போயினர் எங்கு
இடையிற் புகுந்த இனத்தவர் சிங்களர்
உடைமை சொல்வது உலுத்த தனமே
உரிமையை இழந்து உறங்கான் தமிழன்
உரிமைக் காக உயிரையும் கொடுப்பான்
ஒன்ற திரண்டு ஒருகொடிக் கீழாய்ச்
சென்று பகைவனைச் செருக்களத் தெதிர்ப்பான்
அன்று பட்ட அவலம் யாவும்
இன்று மறந்து ஏமாளியாகா
நின்று எதிர்த்து நெடும்போர் செய்து
கொன்று குவிக்கும் கொடியரை அடக்கித்
தன்னிக ரில்லாத் தமிழ்க்குலம் ஓங்கத்
தனக்கென ஆட்சி தரணியில் அமைப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்ட தமிழன் அடிமை அல்ல

ஈண்டு தமிழன் இறைமையின் உரிமை
என்ன ஆச்சு எவர்க்குப் போச்சு
வெள்ளையன் வந்து விரட்டிப் பறித்தான்
வெள்ளையன் ஆட்சி விட்டுச் செல்ல
வலுவிற் பிடித்த வன்னியர் ஆட்சிக்
கொலுவை எமக்குக் கொடுப்பது உரிமை
அப்படி அவர்கள் அரசைக் கொடுக்கா
செப்படி செய்து சிங்கள இனத்தின்
குள்ள நரிகள் கூட்டம் சேர்ந்து
கள்ளத் தனமாய் காலை வாரி
வெள்ளைய னிடத்தில் வேண்டிப் பெற்ற
உள்ள அரசின் உரிமை யெங்கே?
தமிழன் ஆட்சியைத் தம்மிடை வைத்துத்
தமிழனைத் தாழ்த்தச் சட்டம் செய்து
ஆண்ட தமிழனை அடிமை யாக்கி
மீண்டும் மீண்டும் மிதிக்கத் தமிழன்
எத்தனை காலம் இத்தனை சகிப்பான்
வெள்ளையன் நாட்டை விட்டுப்போனால்
கொள்ளையர் வசமா கொடுப்பது அரசை?
அப்படிக் கொடுக்க அவனுக் கேதுரிமை
செப்படி மாற்றுச் செல்லா தென்றும்
தமிழர் தேசம் தமிழர்க்கே சொந்தம்
தமிழரை ஆளத் தருகர் முடியா
தன்னை ஆளத் தமிழன் அறிவான்
தன்னினம் ஓங்கத் தமிழன் உழைப்பான்
கப்பல் ஓட்டிக் கடல்பல தாண்டிச்
செப்பமாகச் சீர்பல குவித்தான்
சிந்துவிற் தொடங்கித் தேசம் எங்கும்
அந்தநாள் முதல் அணிசெய் திராவிடம்
மந்த மாக மடங்கிக் கிடக்குமோ?
சொந்த வீட்டில் துயில்வதை விட்டு
அந்நியர் வீட்டில் அயர்தல் சுகமோ?
தமிழர் மொழிகலை தழைத்து ஓங்கத்
தமிழர்க் காட்சி தனித்தே வேண்டும்
வீரத் தமிழன் வீத்துக் கொண்டான்
சேர ஒன்றாய்த் திரண்டே விட்டான்
வீறு கொண்ட வேங்கை யாக
மாறி விட்டான் தமிழன் இன்று
போரும் புறமும் கண்ட தமிழன்
பேரும் புகழும் கொண்ட தமிழன்
கோரும் உரிமை கொடுப்பதை
யாரும் தடுக்க முடியா தினியே!

கண்டாவளைக் கவிராயர்
ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் சி. கு. இராசையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நான்பெற்ற இன்பம் எல்லோரும் பெறவேண்டும்.

என் ஆவல். அருள்மழை எட்டுவருடத்திற்குமுன் புட்டபர்த்தி பாபாவிடம் போனேன். ஆவர் பாதம் தொடவேண்டும். அருள் மழை பெய்யவேண்டும் என்ற ஆவலில். ஆனால் மூன்று நாள் நின்றேன். ஒன்றும் நடக்கவில்லை. பாபாவும் விசியாய்தான் நின்றார். என் வெய்வது. நிற்கவிருப்பம் ஆனால் நான் போனவாகனம் இந்திழயா காசு ஆறு ஆயிரம் மூன்று நாட்தான் பிறி நிற்கலாம். குவலைக்கு மேல் கவலை வந்துவிட்னே. ஆன்றில் இருந்து விகித செபம் ஓம் ஸ்ரீ சாயிராம் என்று எழுதிக்கொண்டே வந்தேன். இது போனது எட்டு வருடத்துக்கு முன்தான். புட்டபர்த்தி ஆனால் தற்போது 2012 3ம் மாதம் சிறிலங்தாபோக வேண்டும். வையிரவர் வெளியில் பூக்கட்டி பார்த்து வைக்க வேண்டும் என்று சாயிபாபா பாதத்தில் வைக்கவேண்டும் என்ற எண்ணத்தோடும் என்றும் எத்தனையோ யோசனைகளுடன் வெளிக்கிட்டேன். லண்டன் இந்தியா இலங்கை என்று லண்டன் போக மகன் இந்திரன் என்பவர் இங்கு சரவண பாபா என்று சுவாமி ஒருவர் வந்து இருக்கிறார். அவரைப்பார்க்கச் சனங்கள் போகிறார்கள். எல்லபருக்கும் நல்லாய் சொல்கிறார் எனக்கும் சொல்லி இருக்கிறார். நீங்கள் போகில் கொண்டு போய் விடுகிறேன். நீங்களும் கேட்டுப்பாருங்கள். என்று சொன்னார். நான் என்ன கேட்பது என்றும் அவர் சொல்லுவார். ஏன்று நினைத்துக் கொண்டே போனேன். ஆவர் என்னைக்கண்டதும் முன்கண்டவர் போல் என்னை மேலும் கீழும் பார்த்தார். பின் தனது காலைத் தூக்கி நீட்டினார். நான் காலைப்பிடித்து தடவி தடவி கண்கள் குளமாகினது. உடன் சொன்னார் நான் சரவணபாபா அல்ல சாயிபாபா என்றார். எனக்கு தொண்டை திறக்க முடிய வில்லை. அருள் மழை புட்டபர்த்தியில் கனடா இலங்கை என்று அடங்கலும் மழை கொட்எடிவிட்டது. நடந்தது நடக்கப்போறது எல்லாம் சாயிபாபாவியினால் கொட்டிய மழைபோல் கொட்டினார் சரவணபாபா. அப்போதுதான் நான் நினைத்தேன் கடவுள் ஒன்றுதான் என்பதை உணர்ந்தேன்.


'Make an impression'

**Home Beyond**
General Contractor
Commercial - Residential

We specialist in......
- Planning
- Designs + 3D
- Custom Home Build
- Basement
- Washroom
- Kitchen
- Hardwood Flooring
- Tiles
- Deck
- Fence
- Interlock

Shan Jeyakumar
**416 – 839-7410**
homebeyond@mail.com

- Plumbing
- Eclectics
- Security Camera
- Home Theater
- Spot Light
- Grown Molding
- Addition
- Stairs
- Door / Windows

Free Estimate



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச் செய்தி

**கனடா வாழ் முரசுமோட்டை - கண்டாவளை மக்கள் ஒன்றியத்தின் 13ம் ஆண்டு விழா சிறப்புற வாழ்த்துரை.**


கனடா வாழ் முரசுமோட்டை - கண்டாவளை மக்கள் ஒன்றியத்தின் 13 வது ஆண்டு விழா 30 - 03 - 2013 இல் மிகவும் விமரிசையாக நிகழ இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். எங்கள் ஒன்றியம் இன்னும் வளர்ச்சி பெற நாங்கள் அனைவரும் வேகத்துடனும் ஒற்றுமையுடனும் உழைக்க வேண்டும். எங்கள் நாட்டின் பாரம்பரியங்களை எமது இளம் சந்ததிக்கு எடுத்துச் செல்லவும் அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தவும் இவ்வாறான கலைவிழாக்கள் உதவி புரிகின்றது. மேலும் எமது ஊர் பாடசாலைகள் ஆலயங்கள் வளர்ச்சியடைய எம்மாலான உதவிகளைச் செய்ய வேண்டும்.

இன்று இவ் விழா இனிதே நடைபெற ஆதரமுவு வழங்கிய அனைவருக்கும் அனைத்து தொண்டர்களுக்கும் ஒன்றியத்தின் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி
தனா. மாணிக்கவாசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாளரிடமிருந்து....



எமது மண்ணையும் மனங்களையும் நேசிக்கும் கனடா வாழ் முரசுமோட்டை கண்டாவளை
ஒன்றிய மக்களே!

உங்கள் அனைவரையும் இம்மலரின் ஊடாக சந்திப்பதை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது ஒன்றியம் 2000ம் ஆண்டு கனடாவில் உருவாக்கப்பட்டது. கடந்த எட்டு ஆண்டுகளாக கோடைகால விளையாட்டுப் போட்டிகளை மட்டுமே நடாத்திவந்த நாம் இரண்டாவது தடவையாக கலை கலாச்சார நிகழ்வுகளடன் கூடிய இம்மலரை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என் வாக்கிகிற்கமைய நாம் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசிப்பவனே உண்மையான மனிதன் ஆகின்றான் அந்த வகையில் இதுவரைகாலமும் எமது ஒன்றியத்தினால் செய்யப்பட்டு வந்த சேவைகள் தொடர்ந்தும் பலவேறு இன்னல்களக்கு மத்தியிலும் அந்த மண்ணை விட்டு விலகாமல் எம் தாயக உறவுகளுக்கு கிடைக்கவேண்டும் என்பதோடு அதற்கு உங்கள் எல்லோரினதும் ஒத்துழைப்பு அவசியம் ஆகின்றது.

இங்கு வாழுகின்ற எமது வருங்கால சந்ததியினர் எம்மண்ணை அறிவதற்கும் கலை கலாச்சாரங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் இப்படியான நிகழ்வுகள் பெரிதும் உதவுகின்றன. அத்துடன் நாம் எல்லோரும் ஒன்றுகூடி சந்திப்பதற்கும் எம் பழைய நினைவுகள் மீட்டு எடுப்பதற்கும் எமது ஒன்றியம்ஓர் உறவுப் பாலமாக அமைகின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எம் மத்தியில் இருக்கின்ற கலைஞர்கள் படைப்பாளிகள், சிந்தனையாளர்களை வெளிக்கொண்ர்வதில் தொடர்ந்தும் இப்படியான நிகழ்வுகள் உதவுகின்றன. எம் ஒன்றிய வளர்ச்சிக்காக அயராது உழைப்பவர்கள் பலர். அவர்கள் என்றும் போற்றுதலுக்கும் பாராட்டுகளுக்கும் உரியவர்கள்.


இறுதியாக எம் மண்ணில் போரினால் இன்னலுறும் எம் உறவகளின் துயர் துடைப்பதற்காக எம்மாலான உதவிகளைதொர்ந்தும் செய்து வருவோம். இந்த புலம் பெயர்ந்த கனடியத் தளத்தில் ஒரு நிலையாக உறுதியாக இந்த ஒன்றியத்தை பலப்படுத்தி அதனூடு இதன் பயன்பாடுகளை பங்களிப்புக்களை எம் தாய்த்திருநாட்டிற்கும் நாம் புரண்டெழுந்த மண்ணுக்கும் பங்களித்து மகிழ்வோம்.

நன்றி
வணக்கம்.

நாவேந்தன் கந்தையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னியின் நுழைவாயில் வந்தோரை வாழவைத்த
## முரசு மோட்டை



செந்தமிழர் கூட்டம் சென்ற இடமெலாம்
சிறப்புக் கொண்டோர்.

சொந்த இடமெலாம் விட்டு அன்றே காடுகளை
காணி ஆக்கி கஞ்சி குடிப்பதற்கு பாடுபட்டு

செந்நெல் நாற்றிடை அமைத்து நல்லோரை
பேணி வரவேற்ற இடமன்றோ முரசுமோட்டை

முரசு மோட்டையின் வரலாறு முத்தமிழ் வரலாறு
செந்தமிழ் வேந்தர்க்கு பறைசாற்றிற்று அன்று

சொன்ன இடமெல்லாம் சென்று போர்ப்பறை
அறிவித்த வீரம் செறிந்த நற்றமிழர்

பெயர் சொல்லி வாழ்ந்த நம் தமிழர்
மாண்போடு வாழ்ந்த இடம் இதுவல்லவோ

சொன்னாலே வாயூறும் சோற்றின் சுவை
காய்கறிகள் பலவகையுண்டு
பழங்களோ பல்லினம் கலந்த சுவை

பண்போடு பழகும் உழவர் கூட்டம்
பாசத்தோடு வரவேற்று உணவழிக்கும்

பண்பாடு பழக்கமாய் கொண்டு வாழ்ந்த
எம் தமிழர் கூட்டம் இங்கே

கும்பிடக் கடைசிக் கோயில் கந்தனுக்கும் அழகான
மயில் ஆடக் கோயில் உண்டு

காப்பற்றத் தாய்க்கும் கோயிலமைத்து
கொலுவைத்து களம் சுற்றி வாழ்ந்த நற்றமிழர்

நம் மொழி காத்திடவே உதயசூரியனுக்கு
முதல் நாற்றில் நற்பொங்கல் செய்து

படைத்துண்டு பண்டு பாடி நன்றி கூறி
செலுத்தும் மக்கள் கூட்டம் இங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுதுண்டு வாழ்ந்தவர் எருதுகளை மறந்தனர்
கறவைகளை காத்து நின்று கன்றுக்கும் பால்விட்டு வெளியனுப்பும்

பாசம் கொண்ட பண்பு மக்கள் பட்டிப் பொங்கல்
என்ற பரவசமாய் மகழ்ந்து

மெய் மறந்த மறவர் கூட்டம்
வாழ்ந்த இடமல்லவோ முரசு மோட்டை

நற்கல்வி தான் வழங்கும் முருகானந்த கல்விச்சாலை
முத்தமிழோடு முரசு கொட்டும் இவ்வூரில்

"அ"வில் ஆரம்பித்து "ஃ" வரையும் தொழிற்கல்வி
வேளாண்மையை எடுத்துரைக்கும்

இங்கு கல்வி கற்றோர் இன்று உலகமெல்லாம்
உத்தமராய் வாழ்ந்திடுவர்

உரைக்கின்றேன் உறுதியுடன் இன்றும்
உன்னதமாய் விளங்கும் முரசுமோட்டை

முருகானந்தா மகா வித்தியாலயமாய்
பெரும் சிறப்போடு

வந்து சென்று போராண்ட பெருமையினையும்
முரசுமோட்டை பறைசாற்றும்

நம் தமிழர் வாழ்ந்த வரலாறு கொண்டு
நற்றமிழோடு நறுமணம் வீசி நிற்கும்

நம் வன்னித் தளமாம் நற்பணியாற்றிடும்
முற்காலத்து முரசு மோட்டையே

எக்காலத்தும் நிலைத்து நின்று நீடுழி
வாழிய வழியவே

நன்றியுடன்
பூலோகசிங்கம் உதயகுமார்
2ம் கட்டை
முரசுமோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PEARL SIGNS
## & GRAPHIC INC.

*Design, Large Format Printing*
*Fabrication, Manufacturing*

**DIGITAL LED DISPLAY**
**LED OPEN SIGN**
**IN HOUSE CNC ROUTER OPERATION**
**ILLUMINATED SIGN BOXES**
**LED/NEON CHANNEL LETTERS**
**CUT-OUT LETTERS**
**STORE FRONT SIGNS**
**TRADE SHOW DISPLAYS**
**BANNERS . VEHICLE LETTERING**
**LARGE FORMAT DIGITAL PRINTING UP TO 63" WIDTH**
**Digital vinyl image for indoor & outdoor (for 3-5 years)**

Owner: Nava / **Siva**


140 Midwest Rd., Unit 14&15
Toronto, Ont. M1P 3B3

Tel: **416 615 0428**
Cell: **416 562 7115**
**416 587 6921**

Toll Free: 1 888 598 8858
Web: pearlsigns.com
Email: pearlsign@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்டன் தமிழ் ஒன்றியம்

# Brampton Tamil Association

Phone: 416 821 6100, 416 528 1407, 416 319 8976 bramptontamil@yahoo.com

130 Fair wood Circle, Brampton, ON, L6R 0H1 www.bramptontamil.com

**PRESIDENT**
Kiruba Thuraiappah

**VICE PRESIDENT**
Gunabalasingam Balasingam

**SECRETARY**
Guna Thuraisingham P.Eng.

**ASSISTANT SECRETARY**
Vijitha Sureshkumar

**TREASURER**
Subaharan Nadarajah

**ASSISTANT TREASURER**
Pulendran Gopalapillai

**WEB MASTERS**
Kugathas Sellathurai
Jude Joseph

**SPORTS MASTERS**
Santhan Anthonipillai
Nalini Bala

**Executive Committee Members**
Yasokumar Murugar
Subas Subramaniam
Tharani Prabakaran
Magesan Poniah
Amaleethan Xavier

## வாழ்த்துச் செய்தி

பங்குனி 20, 2013

பதின்மூன்றாவது ஆண்டில் காலடி பதிக்கும் முரசுமோட்டை-கண்டாவளை மக்கள் ஒன்றியத்தை நாம் மனதார வாழ்த்துகிறோம். புலம்பெயர்ந்தாலும் தடம்புரளாமல், தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காக்கும் உயர்ந்த இந்த இலட்சியத் தாகத்தை இதயபூர்வமாக பாராட்டுகிறோம். " வயல் காற்று" என்ற தரமான கலை நிகழ்வை வருடந்தோறும் சிறப்பாக நடாத்துவதோடு மட்டுமல்லாது, தாயகத்து மக்களுக்கு குறிப்பிடக்கூடிய வகையில் பல உதவிகளையும் வழங்கி வரலாற்றுக் கடமை ஆற்றுகின்ற முரசுமோட்டை-கண்டாவளை மக்களை நினைத்து பிரம்டன் தமிழ் ஒன்றியம் பெருமை கொள்கிறது.

நமது வரலாற்றை, நமது மொழியின் ஆழத்தை, கலாசார பண்பாட்டின் சிறப்புகளை நினைத்து பெருமை கொள்வதோடு நின்றுவிடாமல், எமது அடுத்த சந்ததிக்கும் போதிக்கும் மகத்தான மானிட தர்மத்தை நாம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். தமிழர்களின் எதிர்கால வரலாற்றில் கனமான பணியை ஆற்றவேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் ஒன்று புலம்பெயர்ந்த எம் தோள்களில் சுமத்தப்பட்டிருக்கிறது. சுயநல வாழ்க்கையில் இருந்து கொஞ்சம் வெளியே வந்து நாம் எல்லோரும் இந்த வரலாற்றுக் கடமைக்கு தோள் கொடுப்போம்.

எதிர்வரும் காலங்களிலும், காத்திரமான பல பணிகளை தொடர்ந்தும் ஆற்ற உங்களை மனதார வாழ்த்துகிறோம்.

நன்றி,

(குணா துரைசிங்கம் - செயலாளர்)

பிரம்டன் தமிழ் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரித் தாயே வாழ்க!

செந்நெல் கதிர் சாயும் முரசுநகர் மண்ணதிலே
முத்தாக விளங்கிடும் கல்வித் தாயே
ஆண்டுகள் எழுபதது மூன்றுகளை அழகாய் நிறைவுசெய்த
அஞ்சா நெஞ்சம கொண்டு வளர்ந்திட்டாயே

நிமிர்ந்து கட்டிடங்கள் நின் புகழ் பாடுதம்மா
நித்தமும் மலரும் கல்யாணியே!
தடைகள் ஆயிரம் வந்தபோதும்
தளராது நடைபோடும் மங்கையே!

எம் நாட்டிற்கு நீ செய்யும் தொண்டாலே உன்னை
வாழ்த்தாத மாந்தரில்லை இம்மண்ணில்
அற்புதப் படைப்பக்கள் புதிய சிந்தனைகள்
வெற்றி நோக்கி வீறுநடை போடுகின்றாய்


உருவத்தில் நீ சிறியவளாயினும்
உன் சேவையில் மிகப் பெரியவள்
பல வித்துக்களை விருட்சமாக்கி
சாதனைகளை பல பல படைத்திடலாம்

கல்லூரித் தாயவளே...!
வான் வரை வளர வேண்டும் உன் தொண்டு
வகை வகையாய் நாமெல்லாம் மிளிரவேண்டும்
யுத்தத்தால் உன் கட்டிடங்கள் அழிந்தாலும்
கல்லூரிக் காலமெல்லாம் புகழ் வீச வேண்டும்
முருகுடன் ஆனந்தம் மருவியே நிற்கும்
கல்லூரித்தாயே நீ வாழ்க வாழ்க

யோ. றஜிமலர்
கலைப்பிரிவு
தரம் 13
கிளி/முருகானந்தா கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுடன்
## முரசுமோட்டை, கண்டாவளை உறவுகளுடன்...



வணக்கம்

எமது முரசுமோட்டை கண்டாவைள மக்கள் ஒன்றியம் 2000 ஆண்ட ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. எமது செயற்பாடுகள் அனைத்துக்கம்உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிவரும் அனைவருக்கும் முதன் 'நன்றியை" தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது ஒன்றியம் 22-பங்குனி 2008, முதல் தடவையாக "வயல்காற்று" என்ற பெயருடன் கலை நிகழ்வை நடத்தியது. தொடர்ந்து 2009இல் நடத்த திட்டமிட்டோம். ஆனால் சந்தர்ப்பங்கள் சரிவரவில்லை மீண்டும், 2013 பங்குனி 30 ல் வயல்காற்று பசுமையாக நினைவுகளுடன் நடைபெறுகின்றமையால் மிக மகிழச்சி அடைகின்றோம்.

வயல் காற்று மூலம் நம் பல நன்மைகளை பெறுகின்றோம். எமது ஊர் சிறுவர்களுடைய கலை கலாச்சார எழுத்து திறமைகளை வெளிஉணர்த்த முடிகின்றது. சிறுவர்கள் தமது தனிப்பட்ட திறமைகளுக்கு ஒரு மேடை அமைத்து வருகின்றோம்.

இவ்விழாவில் எமக்கு கிடைக்கும் பண உதவிகள் எல்லாம் எமது ஊர் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் என்பதனாலும் நாம் பெருமை கொள்கின்றோம்.

இன்று நடைபெற்று கொண்டு இருக்கும் வயல் காற்று மிகவும் குறுகிய கால இடைவேளையில் முடிவு எடுக்கப்பட்ட காரணத்தினால் எமது உறவுகளின் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள் சிறு குறிப்புகள் அனைத்தையும் பெற முடியவில்லை. தயவு செய்து மன்னிக்கவும். அடுத்த வருடம் புதிய நிர்வாகத்தின் கீழ் மிகவும் சிறப்பாகவும் முன் ஏற்பாட்டுடனும் நடைபெறும் என்று உறுதியாக இருக்கின்றோம்.

14 ஆடி 2013இல் வழமையான ஒன்றுகூடலும்/ விளையாட்டு போட்டியும் நடைபெறும் ஒன்று கூடல்கள் மூலம் எமது நண்பர்கள், உறவினர்கள், ஊர்மக்கள் அனைவரையும் கண்டு, கதைத்து எமது உறவை புதுப்பித்து கொள்கின்றோம்.

தினமும் வேலை, 7 நாட்களும் வேலை, சில வேளைகளில் இருவேலைளும் செய்கின்றோம். எமக்கு நேரம் கிடைப்பது இல்லை. கலைவிழா, ஒன்றுகூடல், பிறந்ததின விழா, திருமண விழாக்களில் தான் உறவினர்களை கூட கண்டு கதைக்க முடிகின்றதென கனத்த மனதுடன் கூறுகின்றோம். இது தான் கனடா வாழ்க்கை. கலை நிகழ்வுகன் ஒன்று கூடல்கள் தொடரும்.

பிரதம் விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்த திரு. பொன்னையா விவேகானந்தன் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். 2008இல் எமது நிகழ்வுக்குரிய பெயர் தெரிவு செய்யும் போது நாம் பொன்னையா விவேகானந்தனுடன் கதைத்தோம். "வயல்காற்று" என உருவாக்கிய பெருமை அவரையே சாரும்.

இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. சிறிதரன் அவர்கள் தமது வேலை பழுவுடனும் எமக்கு வாழ்த்து செயதி அனுப்பியமை நன்றியறிதலுடன் பார்க்கவேண்டிய ஒன்று. அவர்கள் ஐரோப்பிய விஜயத்தின் போது நாம் அவருடன் கதைத்தோம். நாடு திரும்பியவுடன் வாழ்த்து செய்தி அனுப்பி விட்டு தொலைபேசி மூலம் உறுதிப்படுத்தி கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துச் செய்தி அனுப்பிய எமது முருகானந்த கல்லூரி அதிபர் திரு. தி. வரதன் அவர்களும் நன்றிக்குரிய ஒருவர். எமது பாடசாலையின் வளர்ச்சியில் மிகவும் பங்கு உள்ளவர். மிக கஷ்டப்பட்டு கல்லூரியாக தரம் உயர்த்திய பெருமை அவருக்குரியது. மிகவும் நன்றி . அத்துடன் முரசுமோட்டையில் இருந்து மாணவர்களுடைய கவிதைளை அனுப்பி இருந்தார்கள். அவர்களுக்கும் எமது நன்றி உரித்தாகட்டும். மாறுகின்ற கிளிநொச்சி என்ற கவிதை மிகவும் நன்றாக இருந்தது. மண்ணை விற்று மாற்றம் வேண்டாம் என குறிப்பிட்டது மனதை உறுத்தியது.

முரசு மோட்டையில் இருந்து நடராசா அவர்களும் வாழ்த்தி செய்து அனுப்பியிருந்தார்கள். பொது வேலைகளில் முன்னின்று செயற்படுபவர். அவருக்கும் நன்றி.

கனடாவில் 2000ம் ஆண்டு எங்கள் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்ட நாட்களில் இருந்து இன்றும் என்றும் பொருளாதார ரீதியாகவும் மற்றும் ஆலோசனை வழங்குவதிலும் முன்னிலையில் இருப்பவர் தனா மாணிக்கவாசகர் அவர்கள் என்பது குறிப்பிடக்கூடியது. என்னவேலைத்திட்டம் என்றாலும் அவர் கூறும் 'வார்த்தை நான் பார்க்கின்றேன்' நீங்கள் தொடங்குங்கள் அந்த ஒரு வார்த்தையில் உற்சாகம் பிறக்கும். தனா மாணிக்கவாசகர் அவர்களுக்கும் நன்றி.

மற்றும் Friendly truck உரிமையாளர் தாஸ். லோகன் மாணிக்கவாசகர். ஏ. வீ.ஆர் ஓட்டோ ரவி. இவர்களும் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் அதிர்ஷ்ட லாப சீட்டுக்குழுக்களில் பரிசுப்பொருட்களை அன்பளிப்பு செய்தவர்கள். அது மட்டுமல்ல ஒன்று கூடலின் போது 'ரீசேட்' அன்பளிபபு செய்வதும் இவர்களே. இவர்களுக்கும் நன்றி. ஒன்றுகூடலில் முதன்முதலில் சைக்கிள் ஏலத்துக்கு வித்திட்டவர் அமரர் கொக்கோ கோலா கணேசன் அவர்கள். தொடர்ந்து 'ராதா ஓட்டோ' ராதா வருடா வருடம் சைக்கிள் வாங்கி அன்பளிப்பு செய்பவர்.

மாறுபட்ட சுவையான சூடான ஏலத்தை நடத்தி பணத்தை சேகரித்து கொடுப்பவர் பரமநாதன் அவர்களே. இவர்களுக்கும் நன்றி. விளையாட்டு போட்டிகள். கலை நிகழ்வுகளை தொகுத்து திறம்பட நடத்துபவர் பிறேம் முத்துக்குமார் அவர்களுக்கும் நன்றி.

வாழ்த்து செய்தி அனுப்பிய பிரம்டன் தமிழ் ஒன்றியமும் மிகவும் முக்கியமானது. குறுகிய காலத்தில் மிக வளர்ச்சி அடைந்த ஒன்றியம். அவர்களுடைய சேவை கனடாவிலும். நம் நாட்டிலும் தொடர்கின்றது. அவர்கட்கும் நன்றி. கடந்த வயல் காற்றில் பிறேம் முத்துக்குமாருடன் தொகுப்பாளராக இருந்த பிரியங்கா கடம்பமூர்த்திக்கும் இவ்வருடம் தொகுப்பாளர் பிறேம். யதுசா காசிநாதர். நிருஷிகா யசோக்குமார் அவர்கட்கும் நன்றி.

மற்றும் எமது ஒன்றியத்துடன் மிகவம் ஒத்துழைப்பு வழங்கி இயங்கும் உறுப்பினர் அனைவருக்கும் நன்றி. உங்கள் சேவை தொடரவேண்டும் 14 ஆடி 2013 "நெல்சன் பார்க்" இல் நடைபெறும் ஒன்றுகூடலில் சந்திப்போம்.

வீட்டில் தமிழில் பேசுவோம். நண்பர்களுடன் தமிழில் கதைப்போம். அடுத்த தலைமுறைக்கும் தமிழை எடுத்துச் செல்வோம்.

நன்றி.

உங்களுடன்
முரசுமோட்டை கண்டாவளை மக்கள் ஒன்றியம் சார்பாக
முருகர் யசோக்குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச் செய்தி

## அச்சுவேலி ஆரம்ப பாடசாலை அதிபரின் ஆசிஉரை



எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய கனடா வாழ் முரசமோட்டை மக்கள் ஒன்றியத் தினருக்கு எழுதிக்கொள்வது.

தாயக மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து சென்றாலும் தாங்கள் பிறந்த மண்ணையும் மக்களையம் மறவாத தங்கள் செயற்பாடுகள் எமது ஊக்கத்திற்கும், ஆக்கத்திற்கும் உந்துசக்தியாக அமைகிறது.

இந்த பாடசாலையின் பழைய மாணவன் என்பதில் பெருமிதம் அடைகிறேன். பழைய மாணவர் சங்கத்தின் உன்னத உழைப்பால் கட்டிட தளபாட மற்றும் கல்விசார் நடவடிக்கைகள் முன்னேறுவதை நான் நன்கறிவேன்.

புலம் பெயர்ந்திருக்கிற நீங்கள் வெளியிடும் இந்த "வயல்காற்று" என்ற நூலானது நிறைவான சாராம்சங்களை கொண்டுள்ளதையும் நான் அறிவேன். இந்த நூலும் இந்தபணியம் தொடர்ந்து மேலோங்க எனது நல்வாழ்த்துக்கள்.

அதிபர்
வே. குணசீலன் (கிளி/முருகானந்தா கல்லூரி பழைய மாணவன்)
யாழ்/ அச்சவேலி ஆரம்ப பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கலுரை

## செல்வி சோதிமலர் முருகர் - அதிபர்

முருகானந்தா கல்லூரியின் பழைய மாணவர்



இவர் தனது ஆரம்ப கல்வி தொடக்கம் தனது ஊரின் பாடசாலையில் பயின்ற இவர் பின்னாளில் அங்கேயே நீண்டகாலமாக ஆசிரியப்பணியை தொடர்ந்தவர்.

ஊர் மாணவச் செல்வங்களால் சோதி ரீச்சர் என செல்லமாக அழைக்கப்பட்டார். தொடர்ந்து வந்த இவர் இடர்கால சூழ்நிலையிலும் முருகானந்தா கல்லூரியில் ஆரம்ப கல்விக்கு ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்ட காலத்திலும் நிறையவே பங்காற்றினார். அந்த மதிப்பிற்குரிய ஆசிரியர் இறுதிக் காலத்தில் முரசுமோட்டை புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்க ஆரம்ப பாடசாலையில் அதிபராக கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கும் மாணவ செல்வங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

**முரசு மோட்டை - கண்டாவளை மக்கள் ஒன்றியம்**
**கனடா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/புனித அந்தோனியார் றோ. க. வித்தியாலயம்

முரசுமோட்டை, பரந்தன்

**Kn/St. ANTONY'S R.C VIDYALAYAM**

Murusumoddai, Paranthan.

Miss M. Sothimalar
Principal

22-09-1955

Reg No:-

Date : 03.03.2011

அன்பான தம்பி கணேசநாதனுக்கு எழுதிக் கொள்வது

தங்களால் மேற்கொள்ளப்படுகின்ற பெருதவி என்னாலும் எனி சக ஆசிரியர் குழாத்தாலும் இனிதே நிறைவேற்றப்பட்டுள்ளது. தாங்கள் இறைவன் துணையோடு எங்கும் முயற்சி வெற்றி பெறுவதற்கு ஆசிரியர் என்ற பொறுப்புக்கு இணங்க உழைப்போம். தங்கள் பணமானது வீணாகி விடாது மாணவர்களை உரிய அவதானிப்போம். பணம் பலரிடம் இருக்கலாம் அதனை மற்றவரும் பயன்படும் வண்ணம் தரும் மனம் சிலருக்கே உண்டு. அந்த வகையில் தாய் தந்தை இழந்து தம் வாழ்வில் உழலும் பிஞ்சு உள்ளங்கள் மனம் குளிர வழங்கும் உங்கள் உள்ளம் உயரியது. அதனை நானும் ஆசிரியர்களும் நன்றி உணர்வோடு பாராட்டுகின்றோம். அத்தோடு அப்பிஞ்சு உள்ளங்களின் மனக்குளிர்வு தங்கள் வாழ்க்கைப் பாதையின் மலர்ச்சியாகவே இருக்கும். உங்களை யாரென்று அறியாத போதும் அவர்கள் மனதில் ஏற்படும் உவகையை நான் கண்டேன். அதனைக் கண்டதும் கல்வியை முன்னெடுக்க பணம் என்ற ஒன்று எவ்வளவு முக்கியமானது என்பதை நான் நன்கு அறிவேன்.

காசில்லாததால் கல்வியை இடைநடுவே நிறுத்தியவர் நான் எனவே உங்கள் பணத்தின் அருமையை நன்கு அறிவேன். எனவே பிள்ளைகளிற்கு அதனை பயன்படுத்தும் வகையில் கண்டிப்பாக நிற்பேன். வாழ்வின் வழியற்ற, வசதியற்ற, வாய்ப்பற்ற குழந்தைகட்கு உதவுவதன் மூலம் உங்கள் உள்ளத்தை மேலும் உயர்த்தி கொண்டீர்கள். உங்களின் உதவிக்கரம் என்றும் நீண்டிருத்தற்காய் இறைவனை வேண்டுகின்றோம்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

தந்தையால் வழிமைக்கப்பட்ட போதும் தனயனாகிய உங்களால் கொண்டு செல்லப்படுவதனைப் பாராட்டி உங்கள் பயணம் வெற்றிபெற வாழ்த்தி முடிக்கின்றேன்.

நன்றி

அதிபர்
மு. சோதிமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவித் தொகை பெறும் மாணவர் விபரம் – 2011

பாடசாலையின் பெயர் :- கிளி/புனித அந்தோனியார் றோ.க.வித்.

| உதவிபெறும் பிள்ளையின் பெயர் | வகுப்பு | தொகை | பணம் பெறுபவர் பெயர் | உறவுமுறை | ஒப்பம் | திகதி | பொறுப்பாசிரியர் ஒப்பம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜெனனி கிருஷாந்தன் | 09 | 2000/= | ஞா. கவிதா | [illegible] | [illegible] | 01.03.2011 | |
| செல்வராசா விஜிந்தனி | 10 | 2000/= | கா. சகிலாதேவி | சிறியதாய் | [illegible] | 01.03.2011 | |
| கறுப்பையா கலைப்பிரியா | 06 | 2000/= | க. முத்துலட்சுமி | சகோதரி | [illegible] | 01.03.2011 | |
| ஜெகநாதன் சோபிகா | 06 | 2000/= | சி. ஆறாயி | அம்மம்மா | [illegible] | 01.03.2011 | |
| மோகன் தனுஷிகா | 09 | 2000/= | சீ. நாகம்மா | அம்மம்மா | | 01.03.2011 | |
| பாபு பபீனா | 07 | 1000/= | நா. பாபு | தந்தை | [illegible] | 01.03.2011 | |
| மோகனதாஸ் புஷ்பரோஜி | 11 | 1000/= | மோ. மாதவி | தாய் | [illegible] | 01.03.2011 | |
| வேலாயுதம் பிரசாந்தினி | 02 | 1000/= | மு. சரோஜாதேவி | அம்மம்மா | [illegible] | 01.03.2011 | |
| விஜயபாலன் மயூரன் | 06 | 1000/= | வி. நாகேஸ்வரி | தாய் | [illegible] | 01.03.2011 | |
| சுந்தரையா திலீசன் | 11 | 1000/= | சு. முத்துலட்சுமி | தாய் | [illegible] | [illegible] | |
| ஜெனனி கவீசன் | 04 | 1000/= | க. ஜீவா | தாய் | [illegible] | 01.03.2011 | |
| வசந்தன் மதிவ்டயா [illegible] | 01 | 1000/= | வ. புவனி | தாய் | [illegible] | 01.03.2011 | |
| மகேந்திரன் ரஜனி | 02 | 1000/= | ம. ஜெயசித்திரா | தாய் | [illegible] | 01.03.2011 | |
| இரவ்ணசாமி பாமா | 10 | 1000/= | இ. தெய்வானை | தாய் | [illegible] | 01.03.2011 | |
| அன்ரன்சங்கர் அஜன்ஸி | 10 | 1000/= | அ. திரேசம்மா | தாய் | [illegible] | 01.03.2011 | |
| இணைபாலன் இலேகா | 07 | 1000/= | இ. ரதீஸ்வரி | தாய் | [illegible] | 01.03.2011 | |
| சாந்தமோகன் ரோஷனி | 05 | 1000/= | சா. ராகினி | தாய் | [illegible] | 01.03.2011 | |
| இராசேந்திரம் சுபலினி | 10 | 1000/= | இ. சுபலினி | | [illegible] | 01.03.2011 | |
| ஜோசப் தலாசா பபியூசன் | 01 | 1000/= | த. பியூசன் | தாய் | [illegible] | 01.03.2011 | |
| பிரபாகரன் அஸ்வினி | 01 | 1000/= | பி. பிரபாகரன் | தந்தை | [illegible] | 01.03.2011 | |
| கண்ணதாசன் தயாளினி | 09 | 1000/= | க. அமராவதி | தாய் | [illegible] | 01.03.2011 | |
| வேலுச்சாமி மதுசனி | 01 | 1000/= | த. வேலுச்சாமி | தந்தை | [illegible] | 01.03.2011 | ந. இ |
| தசிதரன் சுஜாதேவி | 03 | 1000/= | த. நாராயினி | தாய் | [illegible] | 01.03.2011 | |

பொறியியல் பட்டதாரி மாணவன் ஜெனநாதன் கபில்ராஜ் ( பேராதெனிய பல்கலைக்கழகம்) மாதாந்த செலவீனத் தொகை 5000 ரூபாவையும மேற்படி மாணவர்களுக்கான உதவித் தொகையினையும் வழங்குகிறார்கள்.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின் பாதிக்கப்பட்ட மக்களக்கு சேவை வழங்கிவரும் “உறங்கா விழிகள்” கனடா - 647 340 2953 இவர்களக்கு முரசுமோட்டை கண்டாவளை மக்க்ள் ஒன்றியம் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளி/ முரசுமோட்டை அ.த.க.பாடசாலை
KN/ MURASUMODDAI G.T.M.SCHOOL
MURASUMODDAI,
PARANTHAN.

09./01./2013.

தலைவர்/செயலாளர்,
முரசுமோட்டை - கண்டாவளை மக்கள் ஒன்றியம்
(ஒன்ராறியோ)
கனடா.

## உதவி கோரும் வேண்டுகை

எமது பாடசாலை மாணவர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அத்துடன் சிலர் இறுதியுத்தத்தில் பெற்றோரை இழந்தவர்களாக உள்ளனர். ஆகையால் அவர்களுக்கும் பாடசாலைக்கும் கீழ்வரும் உதவிகளைச் செய்வீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

1 மாணவர் சப்பாத்து. - 45
2. மாணவர் அப்பியாசக் கொப்பிகள் - 450
3. புத்தகப் பை - 45
4. பயிற்சி நூல்கள் - 100
5. துவிச்சக்கர வண்டிகள் பெண்களுக்கானது - 5
6. கணனிகள் - 2
7. பாடசாலை மதில் - விருப்பமானதொகைக்கு

ஆகையால் தங்களால் முடியுமான அளவிற்கு உதவி செய்வதன் மூலம், எமது பாடசாலை மாணவர்களின் கல்வி - கற்றல் - கற்பித்தல் மேம்படுவதற்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.


G Ilayath

G. ILAYATHAMBY
Principal
KN/ Murasumoddai G.T.M.S
Murasumoddai,
Paranthan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தெனத் திகழும் முரசுமோட்டை



தாய்மண்ணின் தங்கமான ஓரூராம்
தமிழ் மணக்கும் முரசுமோட்டை அதன் பேராம்!
தாராள வளங்கள் கொண்ட சீராம்
ததும்புகின்ற அன்பெனும் மக்கள் பேராம்!

நவஜீவனம் என்னுமொரு இல்லம்
தவமான சேவைதனை வழங்கும்!
போதகர் தம்பிராஜா அவர்களால் ஆரம்பம்
பொறுப்போற்றார் பின்னாளில் கிருபானந்தராஜாவும்!

ஊரிலே எத்தனையோ வெளி
ஊரியான் நல்லதொரு வயல்வெளி
பழையகம் கொலனியொரு தனியொளி
பலிங்கதேவன் முறிப்பதுவோ எழிலொளி

பன்னங்கண்டிப் பிள்ளையார்  மற்றும்
சேற்றுக்கண்டி அம்மன், சிவ
சுப்பிரமணியர், ஊற்று விநாயகர்
மாதாவென்று ஆலயம் பலவே

கல்விமான்கள், கவிஞர்களோடு
காலங்கள் வென்று களிப்புற நிற்கும்
எழுத்தாளர் இணைந்து காலைதனை வளர்த்து
எற்றமாய் வாழ ஆற்றுவார் பணிகள்!

கல்வி சிறக்க கடமைகள் செய்யும்
முருகானந்தா மகாவித்தியாலயம்
முனனணி வந்து தற்போது தரத்தில்
கல்லூரியானது காண்பதில் சிறப்பே

பசுமை நிறைந்த வயல்களுக்கென்றும்
பரந்து பாயும் தண்ணீரை வழங்கம்
இரணைமடுக்குளம் எங்களின் இதயம்
இரப்பது அதற்கு இடைவிடாச் செல்வம்


மூன்று பகுதிகள் முந்நூற குடிகள்
தாமரை குளத்தொரு பயன் பனை மரங்கள்
தாங்கி நிற்கும் தரமது எங்கள்
முரசுமோட்டை ஊரிற்கே பெருமை

கிழக்கே கண்டாவளையம், மேற்கே
பரந்தன் மற்றம வடக்கே ஆனையிறவும்
தெற்கே வட்டக்கச்சியம் இருப்பது
சிறப்பே எமக்கும் விருப்பே!

இததனை சிறப்புகள் எங்களின் ஊராம்
அத்தனையும் தரும் ஆனந்த ஊற்றாம்!
எத்தனை நாடு . எப்படி வாழ்த்தும்
முத்தெனத் திகழும் முரசுமோட்டையாம்

என். விக்ரமன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முரசுமோட்டை மிளிர்கின்றது.

முரசுமோட்டை எமதுவாழ்விடம் வட இலங்கையின் வளமான கிளிநொச்சி பரந்தன் என்ற இடங்களின் மேன்மை பெறும் பிரதேசம் முரசு மோட்டை ஊரியான் கோரக்கன்கட்டு என்றும் மூன்று கிராம சேவை அலுவலர்கள் பிரதேசங்களாகவும் கண்டாவளைப்பிரதேச செயலகத்தின் பரிபாலனம் பெறும் பிரதேசம். வரலாற்றுச்சிறப்புகள் கொண்டவை. நல்ல வனப்பும், வளமும், நீர் நிலைகளால் செழிப்பும் பொருந்திய இடம். இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீரால் வளம்பெறுகின்றது. கடந்த 1954ம் வருடம் முதல் யாழ் குடா நாட்டின் எல்லாப் பாகங்களில் இருந்தும் மலைநாட்டில் இருந்தும் குடியேறிய எமது முன்னோர்களாவர். அதன் முன்பே இங்குவாழும் பெருமக்களும் இணைந்த பிரதேசமாக மிளிர்கின்றது. இரு போக நெல்விளையும் பூமி, பால்வளமும், ஏனைய பயிர்களும் சிறப்புற அமைந்த இடம், இவையே இங்கு வாழ்பவர்களின் ஆதாரமாகத்திகழ்கின்றது. நற்பண்பும் சறந்த பழக்கவழக்கங்களும், நாகரிகமும் ஆன்மிக ஈடுபாடும் கல்வியில் சிறப்பும் பெற்ற பிரதேசம்.

சைவமும், கிறிஸ்தவமும் இருகண்கள் போல் இங்கு திகழ்கின்றனர். சிவனின் முக்கண்கள் போன்று மூன்று பாடசாலைகள், கிழக்கே அரசினர் தமிழ் கலவன்பாடசாலை, மற்றும் மேற்கே அமைந்த அரசினர் தமிழ கலவன்பாடசாலையும், மத்தியில் முருகானந்தா கல்லூரியும் அமைந்த ஊர். இங்க படித்துப் பிரபலர்களாகத் திகழ்பவர்கள் எண்ணில் அடங்கா இங்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவர்களைத் தன்னத்தே கொண்டுள்ளது. சிறந்த ஆசிரிய் குளாம் பல்வி முன்னேற்றத்துக்காக அரும்பாடுபடுவதை காணக்கூடியதாகவுளளது. பழைய மாணவர்களின் பணிகள் வெவ்வேறு வகையில் இடம்பெறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கனடா வாழ் அன்பர்களின் பங்களிப்ப பெருமகிழ்ச்சியைத் தருகின்றன.

ஆன்மீக வாழ்வு மிகவும் உயர் நிலையில் கடைப்பிடிககப்பட்டு வருகின்றது. பத்துக்கு மேற்பட்ட சைவ ஆலயங்கள் சிறப்பறப் பூசைகள் நடைபெறுகின்றன. இவற்றில் நான்க ஆலயங்களில் சிறப்புப் பூசைகளும் திருவிழாக்களும் இடம்பெறுகின்றன. ஏனைய ஆலயங்களில் பூசைகள், பொங்கல், போன்ற சிறப்புகள் இடம்பெறுகின்றன. ஊர் மத்தியில் கிறிஸ்தவ ஆலயமும் வெகசிறப்பாகப் பிரார்த்தனைகள் இடம்பெறுவதைக் காண முடிகிறது.

எல்லோரும் தத்தமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. முருகன் ஆலயத்தின் பக்கத்தில் அமைந்துள்ள காணியில் ஓர் கலாச்சார மண்டபம் கட்டி விட எல்லா மக்களும விரும்பி சம்பந்தப்பட்ட ஜ்தானங்கள், அரச அதிகாரியளிம் விண்ணப்பித்தும் இது நிறைவோறாதது பெரிதும் கவலையான விடயமாகத் தெரிகிறது.

போக்கவர்த்து வசதிகள் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்ற. விவசாயத்துக்கப் பயன்படுத்தப்படும் உழவு யந்தராங்கள் நெல் அறுவடை செய்யும் யந்திரங்கள், நீர் இறைக்கும பம்பிகள் மற்றும் அதனுடன் தொடர்வடைய ஏனைய பொருட்களும் மலிந்து காணப்படுகின்றன. நாட்டுக்குத் தெவையான மின்சார வசதி செய்யத் துவங்கப்பட்டுள்ளன. வனப்புகன் மிகுந்து சிறப்புறமக்கள் 2012/13ம் வருட காலபோகச் செய்கையில், காலம் தப்பிய மழை வீழ்ச்சியால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

முரசுமோட்டையை தமது தாயகமாகக் கொண்டு வாழும் மக்கள் பெரிதும் பெருமையும், உவகையும் மிக்கவர்களாகவே வாழகின்றார்கள். நமது பெருமை மிகு நாட்டை கனடாவாழ் அன்பர்கள் செழிப்படையச் செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

ஐ. நடராஜா
ஓய்வு பெற்ற காணி அதிகாரி
முரசுமோட்டை, கண்டாவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்

# வளம் தந்த வாழிடம் - கிளிநொச்சி

குறைவில்லாத வளமும் பேரழகும் கொண்ட ஈழத்திருநாட்டின் செழிப்பு மிக்க மாவட்டங்களில் கிளிநொச்சியும் ஒன்று. 1945ம் ஆண்டுக்குப் பின்னர் தோற்றம் கொண்ட நகரம் இது. இரணைமடுக்குளம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் உருவான பல குடியேற்றங்களையும், பழமை வாய்ந்த பல கிராமங்களையும் உள்ளடக்கி 1960க்குப் பின்னர் கிளிநொச்சி என்ற தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. அதற்கு முன்னர் சாவச்சேரி தொகுதியுடன் இது இணைந்திருந்தது. 1983ம் ஆண்டில் கிளிநொச்சி தனி மாவட்டமானது.

இந்த மாவட்டம் தோற்றம் கொண்டு குறுகிய காலத்திற்குள் செழிப்பு மிக்க மாவட்டமாக மாறியது. இரணைமடுக்குளத்தின் நீரும், பல பாகங்களிலிருந்து குடியேறிய மக்களின் கடின உழைப்பும், பூர்வீக கிராமங்களின் சிறப்பும் இதன் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன.

கிளிநொச்சி மாவட்டக் கிராமங்களைப் பழமை வாய்ந்த கிராமங்கள், குடியேற்றக் கிராமங்கள் என இருவகையாகப் பிரிக்கலாம்.

பூநகரி, வலைப்பாடு, கிராஞ்சி, நச்சிமார்கட்டு, பல்லவராயன் கட்டு, கண்டாவளை, ஆனை விழுந்தான், முரசுமோட்டை என்பன பழமை வாய்ந்த பூர்வீகக் கிராமங்களாகும். இவற்றுட் சில கிராமங்கள் வரலாற்றுக்கால நிகழ்வுகளோடு தொடர்புடையவை.

பழைய கொலணி, திருநகர், ஜெயந்தி நகர், கணேசபுரம் உருத்திரபுரம், திருவையாறு, வட்டக்கச்சி, இராமநாதபுரம் விசுவமடு என்பன குடியேற்றக் கிராமங்களாகும். இரணைமடுக்குளம் நிர்மாணிக்கப்பட்ட பின், அதன் நீரைக்கொண்டு செல்லும் வாய்க்கால்கள் பல கிளைகளாகப் பிரிந்து ஓடின. அவை முறையே முதலாம், இரண்டாம் வாய்க்கால்கள் என அழைக்கப்பட்டன. பத்தாம் வாய்க்கால் உருத்திரபுரத்தில் முடிந்தது. பெரும்பாலும் இந்த நீரோட்டத்தை அண்டியே குடியேற்றக் கிராமங்கள் உருவாக்கப்பட்டன. கல்மடுக்குளத்திற்கு அருகிலும் சில கிராமங்கள் தோற்றம் கொண்டன. கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கணேசபுரம் வரை தொடருந்துப் பாதையை அண்டி உருவாக்கப்பட்ட குடியிருப்பே இன்றும் பழைய கொலணி என அழைக்கப்படுகின்ற கிளிநொச்சியின் முதல் குடியேற்றப்பகுதியாகும்.

குடியேற்றக்காலத்தில் பாம்புகளும் நுளம்புகளும் மக்களுக்குப் பெரும் துன்பத்தை ஏற்படுத்தின. குடியேற வந்தவர்கள் பலர் ஓடிப்போயினர். எஞ்சியவர்கள் பெரும் போராட்டம் ஊடாகவே வளர்ச்சியடைந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் வடக்குப் பகுதியை அண்டிய கிராமங்களே பெரும்பாலும் பழமை வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. கிளாலி கடலேரிக்குத் தெற்காக அமைந்துள்ள பூநகரி வரலாற்றுச் சிறப்பு மிக்க கிராமமாகும். ஒரு சிற்றரசனின் ஆட்சிமையமாகவும் பூநகரி விளங்கியதாக ஒரு செய்தி உண்டு. யாழ் மாவட்டத்தில் இருந்து தெற்காகச் செல்லுகின்றவர்கள் கொழும்புத்துறையில் (கொழும்பு நோக்கிச் செல்வோர் புறப்பட்ட துறையாதலால் இப்பெயர் தோன்றியது என்பர்.) படகேறி வலைப்பாடு, கிராஞ்சி, நாச்சிமார்கட்டு போன்ற துறைகளில் இறங்கினர். வடமராச்சி மக்கள் கேரதீவு வழியாகச் சங்குப்பிட்டித்துறையைப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தினர். இத்துறைகளில் இறங்கியோர் தென்பகுதிக்குப் பயணமாவதற்கு முன், ஒன்றுகூடி ஆறிய இடமாகப் பூநகரி திகழ்ந்தது. இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பல தடயங்கள் அப் பகுதிகளின் பழஞ்சிறப்புக்குச் சான்று தருகின்றன. பூநகரியில் இருந்து மூன்று முக்கிய பாதைகள் பிரிந்தன. ஒன்று மன்னார் நோக்கி நீண்டது. பூநகரியில் இருந்து மேற்குப்பக்கமாக முல்லைத்தீவு நோக்கி ஒரு பாதை சென்றது. இப்பாதையே இன்று பரந்தன் வழியாக முல்லைத்தீவு செல்லப் பயன்படுகின்றது. இப்பாதையில் தோன்றிய கிராமங்களே நல்லூர் (பூநகரிக்கு அருகில் உள்ள கிராமம்) குஞ்சுப்பரந்தன், பரந்தன், முரசுமோட்டை என்பன. மூன்றாவது பாதை, குஞ்சுப்பரந்தனுக்கு அருகில் முல்லைத்தீவு செல்லும் பாதையில் இருந்து பிரிந்து, உருத்திரபுரம் சிவன்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகக் கோணாவில் சென்று, ஆனைவிழுந்தான் மல்லாவி ஊடாகத் தெற்கிற்குச் சென்றது.

யாழ் மாவட்டத்தின் கிழக்கில் வாழ்ந்த மக்கள் தென்பகுதிகளுக்குச் செல்வதற்காக இப்போது கொம்படி என அழைக்கப்படுகின்ற பகுதியைப் பயன்படுத்தினர். இதுவே ஆழம் மிகக்குறைந்த கடலேரிப் பகுதியாகும். மாரிகாலத்தில் சிறு படகுகளிலும், கோடைகாலத்தில் நடந்தும் மக்கள் இப்பகுதியைக் கடந்தனர். வடபகுதிக்கும் தென் பகுதிக்குமான அக்கால ஊர்திப்போக்குவரத்து இப்பகுதியினூடாகவே நிகழ்ந்தது. இப்பாதை அக்காலத்தில் கண்டிவரை நீண்டிருந்தது. கல்மடுப்பகுதியில் இப்பாதையின் தடயங்களை இப்போதும் காணலாம். பழைய கண்டி வீதி என இப்பாதைச் சிலர் இப்போதும் குறிப்பிடுவர். இப்பாதையை அண்டிய பழைய கிராமமே கண்டாவளை ஆகும். இப்பாதையினூகச் செல்வோர் பாம்புகளால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அவர்கள் வழிபடுவதற்காக இப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட ஆலயமே புளியம் பொக்கனை நாகதம்பிரான் எனக் கருதலாம்.

இப்பயணப்பாதைகளின் முக்கியத்துவம் எல்லாம் ஏ9 பாதை திறக்கப்படும் வரையிற்தான். தற்போது உப்பளத்திற்கு அருகே இருக்கும் ஆனையிறவுப் பாலம் கட்டப்பட்டு கண்டி வீதி திறக்கப்பட்ட பின் இப்பாதைகள் யாவும் முதன்மை இழந்தன. போர் நடைபெற்றபோது கண்டி வீதி மூடப்பட்டிருந்த காலங்களில் இப்பாதைகள் மீண்டும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

பூநகரியிலிருந்து தெற்குநோக்கிச் செல்வோர் வழிபட்ட ஆலயங்களில் உருத்திரபுரம் சிவன் கோவில் மிகப்பழமையானது. இராஜராஜசோழன் ஈழத்தைக் கைப்பற்றி ஆண்டபோது அவர்கள் பயணித்த பாதையில் இந்த ஆலயத்தை நிர்மாணித்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. பொறிக்கடவை அம்மன், வற்றாப்பளை அம்மன், புதூர் நாகதம்பிரான் போன்ற ஆலயங்களும் வன்னிப் பகுதியின் பழமை வாய்ந்த கோவில்களாகும். கிறித்துவ மதம் பரவியபின், வன்னிகாட்டின் வழியே வடக்குத் தெற்கு நோக்கிப் பயணித்தவர்கள் தோற்றுவித்த ஆலயம் மடுமாதாவாகும்.

ஏ9 பாதை தோற்றம் கொண்ட பின் அப்பாதையை அண்டி உருவான இரட்டை நகரங்களாக பரந்தன் கிளிநொச்சியைக் கருதுவர். ஆனையிறவு உப்பளம் தோற்றுவிக்கப்பட்ட பின், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. இவை இப்பகுதியின் முக்கியத்துவத்தை அதிகரித்தன. கண்டாவளை களிமண் வளம் மிக்க பகுதி. அங்கு ஓட்டுச் தொழிற்சாலை ஒன்றும் சிறப்பாக இயங்கியது.

வன்னிப்பகுதின் மழைநீரின் பெரும்பகுதி கனகராயன் ஆறுவழியாக வழிந்தோடி ஆனையிறவில் கலக்கும். பெரும்பாலும் முரசுமோட்டைகளும் கண்டாவளைக்கும் இடைப்பட்ட பகுதியினூடாகவே இந்த நீர் ஆனையிறவை நோக்கிப் பாய்ந்து செல்லும். இவை ஓடும் வழியில் நிர்மாணிக்கப்பட்ட குளங்களே இரணைமடு, கல்மடு என்பவையாகும். வன்னியின் மேற்குப் பக்கத்தில் பாயும் நீர் காட்டாறு, குடமுருட்டியாறு வழியாக கிளாலி கடலேரியைச் சென்றடைகின்றன.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறியிருந்தனர். அச்சமூட்டும் விலங்குகள் வாழ்ந்த வனப்பகுதிகளை வளம் கொழிக்கும் வயல்களாக்கினர். இலங்கையின் சிறந்த விவசாய மாவட்டமாக கிளிநொச்சி திகழ உதவினர். போராட்ட காலத்திலும் மையக்களமாக இந்த மாவட்டம் திகழ்ந்திருந்தது,

போருக்குப் பின்னர் செழிப்பிழந்திருக்கும் இந்த மண்ணுக்கு உதவ வேண்டியது எம் முதன்மையான கடமைகளில் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கரைகளைத் தேடி

எதற்கோ எங்கோ
தரித்திருந்த கரைகள்
தூர விலகிச் செல்கின்றன.

காலாறி நடந்த மணலும்
கரம்கோர்த்த மரங்களும்
உற்சாகத் தூக்க இரவுகளும்
முடிவுறுகின்றன.
எடுத்த எடுப்பில்
நிலைதடுமாறி வீழ்ந்தெழும்பி
தாக்கப் பிடித்து நிற்க விளைகிறேன்.

அலைகளைத் தாவித் தாவி
நினைவுகள் மேவி மேவி
படகு விரைகிறது.
ஒளி பூத்த கரைகளின் நினைவில்
வெள்ளிகளை மறந்துவிட முடியுமா
விழிகளால்.

கரிய இருள் போர்வையின் கீழ்
கொடிய கடல் விலங்குகளின்
மூர்க்கங்களை எதிர்த்தபடி
இருப்பையே அச்சுறுத்தும்
திடீர் புயல்களையும்
கொந்தளிப்புகளையும்
முகம் கொடுத்து
எனது கரைகளை நோக்கி

கரங்களின் வலிமை
துடுப்பை அசைக்கட்டும் - சிறு
படகே எனினும் சமுத்திரம்
தாண்டட்டும்

ஒளிப் பொட்டுக்களோடு - வானம்
திசை சொல்கிறது
உயர்ந்தும் பதிந்தும் - கடல்
வழிவிட்டுத் தருகின்றது.
சுமந்து வந்த பாரமும்
கடந்து வந்த தூரமும் உறுத்த
கரைசேர வேண்டும் விரைவாய்

யோகலிங்கம் நாகரூபன்
2013 வர்த்தகப்பிரிவு
கிளி/முருகானந்தா கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nero Electrical



உங்களுக்குத் தேவையான
Washer, Dryer, Dishwasher, Kitchen Hood
போன்ற சகல விதமான
மின்சாதன பொருட்களையும்
இணைத்துக்கொள்ள
அழையுங்கள்

Refridgerator இற்கு நீர் இணைப்பு செய்து தரப்படும்.

Yasokumar (Kumar)
Licenced electrician)
Tel: 416 414 1024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ratha Autos

**ALL MACHENICAL WORKS**



- Tuneup
- Breaks
- Tire Change
- Wheel Balance
- Muffler Work
- Under Coating
- Engine, Transmission




**2305 Markham Road unit #05 (Rear Side)**
**Scarborough, M1B 2W3**
**(Markham & Finch)**

**Contact : Ratha**

**Bus: 416 297 4747 Cell: 647 338 7316**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "It's more than real estate, It's real Life"

I can also assist you in mortgage financing
[1st & 2nd Mortgage]

Brampton
Markham
Toronto
Scarborough



**Dhayalini** Rajah, Sales Representative

Direct **416.807.2322** Bus 905.201.9977

dhayalini.com like follow me online

**Homelife/Future Relty Inc., Brokerage,**
Independently Owned and Operated
**Fax: 905.201.9229**
**205-7 Eastvale Dr, Markham ON L3S 4N8**

HOMELIFE HIGHER STANDARDS

## உங்கள் கனவு இல்லத்தின் முகவரிக்கு இலகுவாக சென்றடைய என்னை நம்பிக்கையுடன் நாடுங்கள்...

I can also assist you in mortgage financing
[1st & 2nd Mortgage]

Brampton
Markham
Toronto
Scarborough



**Dhayalini** Rajah, Sales Representative

Direct **416.807.2322** Bus 905.201.9977

dhayalini.com like follow me online

**Homelife/Future Relty Inc., Brokerage,**
Independently Owned and Operated
**Fax: 905.201.9229**
**205-7 Eastvale Dr, Markham ON L3S 4N8**

HOMELIFE HIGHER STANDARDS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகம் மாறும் கிளிநொச்சி

சாலையோர பூமரங்கள்
சருகுகள் வீழ்ந்த புழுதி வீதிகள்
'த்' குறித்த வாகனங்கள்
'கா' கூறும் காகங்கள்
தமிழ் பொறித்த பதாதைகள்
தண்ணொளி வீசிய நிலவு
என்றும் நிறைந்த வீரம்
ஏமாற்றம் காணாத ஞானம்
எல்லாம் இன்று
முகம் மறைந்து
முகப்பூச்ச அழிந்து
தன் வண்ணம் இழந்து நிற்கிறது.
நம் தமிழர் தாயகம் கிளிநொச்சி
அகன்ற வீதிகள்
அடிக்கடி விபத்துகள்
அளவற்ற உயிர்ச்சேதங்கள்
நடைபாதையில் காதல் சோடிகள்
நாகரீகமற்ற உடை நடைகள்
நம்பிக்கையறற மானிடர்கள்
நடைப்பிணமாய் தமிழ் மக்கள்
கதிர்களற்ற வயல்வெளிகள்
காதைப் பிளக்கும் ஒலியலைகள்
சாயம் கழன்ற எம் மண்ணில்
என்றும் நாம் காண்போம்
அன்று கண்ட அமைதி வாழ்வை
நாடும் வளரட்டும் - எமது
மண்ணும் வளரட்டும்
ஆனால் கண்ணை விற்று
ஓவியம் வேண்டாம் எம்
மண்ணை விற்று
மாற்றம் வேண்டாம்

கு. நிருபன்
2014 (கணிதம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்கள் ஊர்

நாணம் கொண்ட
குமரிப் பெண்ணவள்
தலை குனிந்து நிற்பதுபோல்
கொத்தான நெல் மணிகள்
தலை சாய்க்க
வாய்க்கால் நீர் சலசலக்க அருகில்
எருக்கலை பூத்துச் சிரித்து நிற்க
பார்ப்போர் இயற்கை இதுதான் என்று
பரவசப்படும் அழகாம் எங்கள் ஊர்

முரசுமோட்டை எனும் நாமம் கொண்டு
முன் வினை தீர்க்கும் விநாயகரோடு
முருக எனும் அழகன் கோயில் கொண்டும் இன்னும்
வருக தருவேன் அருள் என
வந்தமர்ந்தாள் சேற்றுக்கண்டியில் அம்மனவள்
காவல் காப்பேன் என வைரவரும் அமத்திருப்பார்
எங்கள் ஊரில்
இந்த சிறப்புக் கொண்டது எங்கள் ஊர்!

முருகானந்தா கல்லூரியோடு
முரசுமோட்டை பள்ளியும் இங்கு
தனித்துவமாய் இயங்கி சந்ததி
உருவாக்கிய சரித்திரங்கள் பலஉண்டு
கல்வியில் சிறந்தது எங்கள் ஊர்

அந்தக் கல்வியில் சிறந்த சமூகமுண்டு
கலைகளில் வல்லுனர் பலர் உண்டு இங்கு
பள்ளியில் படித்த பலர்
பார் புகழ வாழும் சேதியுண்டு- நினைக்கையில்
பரவசம் தரும் எங்கள் ஊர்

எந்தொழிலையும் எள்ளி நகையாடாமல்
ஏர் பிடித்து உழவு செய்து
ஏற்றம் கண்டோர் கதை
நிறையவே இங்கு உண்டு
எண்ண எண்ண இனிமை தரும்
எங்கள் ஊர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி நான் விசிடும் கவிதையில்
என் அன்னை மண்ணின்
பெருமையுண்டு

தள்ளி நாம் இருந்தாலும் எம்
தாயகம் பார்க்கும் ஆசை
தாகமாய் நெஞ்சுக்குள்
நிறையவே உண்டு
காலம் கனிந்து வர - என்
கண்ணின் மணியாம் தாய்
மண்ணில்
என் பாதம் பதித்து நிற்கும்
காலம் வரும்
அது வரையில்
நம்பிக்கையோடு காத்திருப்பேன்

நன்றி
யதுசா காசிநாதர்


CINI TIMES
HD Production




A Name to remember for
all your occasions

- Wedding
- Birthday
- Purberty ceremony
- Arangetram
- Stage Shows

Contact: Kannan - 647 300 8884 kiri27@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் நன்றியுடன்...



இவ்விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்து கொண்டு இருக்கம் முரசுமோட்டை, கண்டாவளை உறவுகள், நண்பர்கள் நலன் விரும்பிகள், மற்றும் பிரதம விருந்தினர் அவர்கட்கும் முதற்கண் வணக்கம்

கனடா வாழ் முரசுமோட்டை கண்டாவளை மக்களிடம் ஒன்யத்தின் சார்பாக உதவி கேட்டு செல்லும் வேளைகளில் எல்லாம் மனம் கோணாமல் உதவிகள் பல புரிந்து, வரவேற்கும் எமது உறவுகளுக்கு முதல் நன்றி

கடந்த 13 வருடங்கள் ஆக ஒன்றியத்திற்கு அதிக அளவு பொருளாதார உதவி செய்த பெருமை தனா மாணிக்கவாசகர் அவர்களையே சாரும். இன்று இவ்விழாவுக்கும் அவரின் பங்களிப்பு அளப்பரிது. அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிகழ்ச்சி தொகுப்பாளராக திறம்பட நடத்திய பிறேம், பிரியங்கா, தர்சனாவுக்கும் வருடாந்த ஒன்றுகூடல் விளையாட்டுப் போட்டிகளில் பெரும் உதவி செய்த பிறேம் அவர்கட்கும், எமது சங்கத்தின் சார்பாக நன்றி கூற கடமைப்படிருக்கிறேன்.

அத்துடன் R.Sவீடியோ, Nature போட்டோ, ஒலி அமைப்பு அமைத்துக் கொடுத்த அனைவருக்கும் எமது நன்றி

விழா மண்டபம், அதன் ஒழுங்கமைப்பு செய்த கனடா கந்தசுவாமி கோவில் அமைப்பாளர்களுக்கும், இம் மலர் வெளியிட விளம்பரம் தந்து உதவிய வர்த்தக நண்பர்கள் மற்றும், அதிஸ்டலாபச்சீட்டுக்கு உதவிய அனைவருக்கம்எமது நன்றி உரித்தாகட்டும்.


இம் மலர், அதிஸ்டலாபச்சீட்டு அச்சிட்டு உதவிய **Graphic Land** கிருஷ்ணா மற்றும் அவர்களின் உதவியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

நாடகத்தினை நகைச்சுவையுடன் வழங்கிய திரு. கணபதி ரவீந்திரன், மற்றும் சிறப்பாக நிகழச்சிகளை தந்து கலகலப்பாக்கிய சிறுவர் சிறுமியர்கள், பெற்றோர்கள் மற்றும் பங்குபற்றிய கலைஞர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். மங்கள விளக்கு ஏற்றி மங்களகரமாக ஆரம்பித்து வைத்த எமது கிராம பெரியவர்களுக்கும், உணவு மற்றும் அனைத்து உதவிகள் புரிந்த எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி.


எமது ஒன்றிய வளர்ச்சிக்கு உதவி புரிந்து கொண்டு இருக்கும் எமது வர்த்தகர்களின் விளம்பரம் பெருக அவர்களிடம் உங்கள் சேவைகளை பெற்றுக்கொள்ள நாடவும். அத்துடன் யூலை 14. 2013 இல் **Nelsson Park** இல் நடைபெறும் ஒன்றுகூடலில் உங்கள் ஒற்றுமையை காண்போம். மீண்டும் ஒன்றுகூடலில் சந்திப்போம். நிகழ்ச்சியை கண்டு கழித்த அனைவருக்கும் மீண்டும் நன்றி வணக்கம்.

உங்களுடன்
செயலாளர்
திரு. முரளிதரன் சிவசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'உறங்காவிழிகளால்' உதவி வழங்கப்பட்ட மாணவர்களுடன் ஆசிரியர்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PowerBros



Sales Representatives


**Uthayan Sivarajah**
416-301-5555

**Sugan Sivarajah**
416-890-9999

**Raj Sivarajah**
416-823-9797

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/Future** Realty Inc., Brokerage
Bus.: 905-201-9977 Fax : 905.201.9229
Independently Owned and Operated, REALTOR ★ Sales Representative
www.futurerealtor.ca



Sivarajah Siva**kumar**
Sales Representative
Direct : **416-453-7777**
Email : remaxkumar@gmail.com

RE/MAX

RE/MAX®
Realtron Realty Inc., Brokerage
Each Office Independently Owned and Operated


REALTOR MLS MULTIPLE LISTING SERVICE

209-885 Progress Ave.,
Toronto, ON M1H 3G3

• B: 416-289-3333 • F: 416-289-4535



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# People don't plan to fail, but they do fail to plan

- Estate Planning
- Disability Income Insurance
- Critical illness Insurance
- Mortgage Insurance
- No medical exam Life Insurance
- Permanent Life Insurances
- Term Life Insurance
- Travel & Visitor Insurance
- RRSP Loan / Investment
- RESP

**You don't have to take life the way it comes to you...
You can design your life to come to you the way you want!**

**நாளை நம் கையில்
இன்றே செயற்படுங்கள்**



*As an Independent Insurance Broker, I will shop around for you and get you the best rate...*

**Guna Thuraisingham** M.A.Sc (Eng.), P.Eng.
*Independent Insurance Advisor*
**Dir: 416 528 1407**
Tel: 905 230 4986 | guna@elite-associates.ca
www. elite-associates.ca

**Auto & Home Insurance**
குறைந்த கட்டணத்தில் பெற்றுத் தரப்படும்

Industrial Alliance | RBC Royal Bank | Assumption Life | Desjardins | Manulife | Foresters

# Accounting & Income Tax Services

## Deepa Gunaraja
B.Com (Hon)

Direct: **416 553 8499**
Office: 905 230 4986
dgunaraja@live.com

- ✓ Personal Income Tax Return
- ✓ Corporate Income Tax Returns
- ✓ Book Keeping
- ✓ Payroll
- ✓ GST/HST Returns
- ✓ Tax Planning for Small Businesses and Self Employed People

**E-File**

## Maximum Tax refund Guaranteed!!

**Elite Associates**
www.elite-associates.ca

**With a Tax Optimization Software**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PRO STAR

## Driving School






99% Of G2 And G Clients Pass The Test One Time!

- Road Test Are Also Available Outside Of Toronto
- Government Licensed Instructors
- Day, Evening & Weekend Classes
- Highest Level Of Confidence
- Early Road Test Arrangement
- Compare Our Lowest Rates
- Graduate Certificate Recognised By The Insurance Industry




In Car Lessons: Toronto, Scarborough, Markham, Ajax and Stouffville

கனேடியன் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற **தாஸ்** அவர்களின் பயிற்சியால்..99%
மக்கள் G2 மற்றும்G தேர்வுகளில் ஒரே தடவையில் சித்தியடைந்துள்ளனர்

Scan Me

Contact: THAS 416-272-0914
Email: thas_1974@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



NERO
ELECTRICAL
RESIDENTIAL, COMMERCIAL & INDUSTRIAL SERVICES
புது வீடுகளுக்கான மின்னிணைப்புகள் செய்து கொடுக்கப்படும்

- Refrigerator (நீரிணைப்பு)
- Kitchen Hood
- ervice Upgrade
- Panel Upgrade
- Basement Wiring
- Spot Lights
- Electrical Repair works

Call: **YASOKUMAR - 416 414 1024**
neroelectrical@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INSURANCE SERVICES



## Thana Manickavasagar

*Broker*

**Cell: 416-728-5772**

Business: 416-519-3896

**Non Medical Insurance for Low Rates upto age 85**



## Life Insurance

**Critical Illness Insurance**

**Mortgage Insurance**

**RRSP - Start from $25**

**RESP - Start from $25**

**(20%-40% Government Grant + 15% Company Bonus)**

80 Nashdene Road, Unit D218
Scarborough, On
M1V 5E4

thana7@gmail.com
www.thana.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org